## அன்றே சொன்னார் அண்ணா

# “எனக்குப் பின் வருவார் என் தம்பி கருணாநிதி!” என்று!

### லண்டனில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில், சுப. வீரபாண்டியன் உரை!



லண்டன், ஜூன் 16-

லண்டனில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச்செயலாளர் சுப. வீரபாண்டியன் ஆற்றிய உரை வருமாறு:-

யாரை நினைத்தால் என் நெஞ்சமெல்லாம் நிறையுமோ, யாரைப் பற்றித் தொடர்ந்து பேசினால் என் கண்கள் கலங்குமோ, யாருடைய புகழை எடுத்துரைத்தால் என் நாவின் மொழி சிறக்குமோ, அந்த மாமனிதர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருக்கான நூற்றாண்டு விழாவை, லண்டனில் உள்ள தமிழர் முன்னேற்றக் கழகமும், திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியும் இன்று இணைந்து நடத்துகின்றன. லண்டன் நகரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்விழாவில் பங்கேற்று உரையாற்ற எனக்கும் வாய்ப்பு அளித்த நண்பர்களுக்கு என் அன்பையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்!

இவ்விழாவை மிகச் சிறப்புடன் நடத்திக் கொண்டிருக்கும் தமிழர் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அன்பழகன் உள்ளிட்ட பொறுப்பாளர்களே, உரையாற்றிச் சென்றிருக்கும் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்டீபன் டிம்ஸ் அவர்களே, லண்டன் மாநகரத்தின் துணை மேயர் அப்பு தாமோதரன் அவர்களே, திமுகழக அயலக அணியின் பொறுப்பாளர் பைசல் அவர்களே, மேடையில் வீற்றிருக்கும் பெரியோர்களே, அரங்கில் நிறைந்திருக்கும் அன்பு நண்பர்களே அனைவருக்கும் என் அன்பு வணக்கம்!

### உலகெங்கும் கலைஞருக்கு விழா!

நம் அன்பிற்குரிய தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கலைஞர் நூற்றாண்டு விழா, ஓர் ஆண்டு முழுவதும் நாடெங்கும் நடைபெறும் என்று அறிவித்துள்ளார். நம் நாட்டில் மட்டும் இல்லை, இவ்விழா உலகெங்கும் நடைபெறும் என்பதை லண்டனில் நடைபெறும் இந்த விழா நமக்கு உணர்த்துகிறது!

இந்த விழா இங்கு நடைபெறுவது சிலருக்குத் தேவையற்ற சில பொறாமை உணர்வுகளையும், எரிச்சலையும் ஏற்படுத்தி இருக்கிறது என்று நண்பர்கள் சொன்னார்கள். அந்த எரிச்சல்காரர்களுக்குப் பணிவோடு ஒன்றை நான் சொல்லிக் கொள்வேன்," இந்த விழாவின் ஒலி, ஓராண்டுக்குக் குறையாது! நம் தலைவர் கலைஞரின் புகழோ, நூறு ஆண்டுகள் ஆனாலும் மறையாது!!

தலைவர் கலைஞர் குறித்து எத்தனையோ கோணங்களில், எத்தனையோ செய்திகளை நாம் பரிமாறிக் கொள்ள முடியும். என்றாலும், காலம் கருதி, தமிழுக்கும், தமிழர்களுக்கும் அவர் செய்துள்ள ஓரிரு பணிகளை மட்டும் இங்கு நான் தொட்டுக்காட்ட விரும்புகிறேன்!

இன்றைக்கு நம் தாய் மொழி தமிழை செம்மொழி என்று சொல்லி நாம் பெருமைப்பட்டுக் கொள்கிறோம். தமிழைச் செம்மொழி என அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை ஒரு நூற்றாண்டுக்கு முன்பே எழுந்தது. என்றாலும் 20 ஆண்டுகளுக்கு முன், இதே ஜூன் மாதத்தில் தான், தலைவர் கலைஞர் அவர்களின் முயற்சியால் அந்தக் கோரிக்கை அன்றைய ஒன்றிய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது! அந்தப் பெருமை முழுக்க முழுக்க நம் தலைவரையே சாரும்! அதனுடைய பயன்களை, இன்று இந்த மண்ணில் வாழும் பிள்ளைகளும் பெற்று வருகின்றனர் என்னும் உண்மையை, நாம் உலகுக்குச் சொல்ல வேண்டும்!

இன்று காலை இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளிக்கு நான் சென்று இருந்தேன். அப்பள்ளி கடந்த 48 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது என்பதை அறிந்த போது பெருமையும் பெருமகிழ்வும் கொண்டேன். அங்கே நம் பிள்ளைகள் ஆர்வமாகத் தமிழ் கற்று வருகின்றனர்!

தமிழ் நம் தாய்மொழி, அதனைக் கற்றிட வேண்டும் என்பதோடு, தமிழைக் கற்பதால் இங்கிலாந்து நாட்டில் சில பயன்களையும் நம் பிள்ளைகள் பெற முடிகிறது. ஐரோப்பாதான் முதன் முதலில் செம்மொழி என்னும் கோட்பாட்டை வெளியிட்டு, கிரேக்கமும், லத்தீனும் செம்மொழிகள் என அறிவித்தனர். எனவே அவர்கள் செம்மொழிக்கு உரிய தகுதியை நன்கு அறிந்தவர்கள்.

இங்கே ஒரு மரபு இருக்கிறது. பிள்ளைகள் மருத்துவக் கல்லூரியில் சேர வேண்டுமானால், உயர்நிலைப் படிப்பில், மிகக் கூடுதலான A grade மதிப்பெண்களைக் குறைந்தது மூன்று பாடங்களில் பெற்றிருக்க வேண்டும். இரண்டு பாடங்களில் மட்டுமே பெற்றுள்ளவர்கள் । தமிழ்ப் பள்ளிகளில் தமிழ் கற்று, உரிய முறையில் தேர்வு எழுதி, அதில் A grade மதிப்பெண் பெற்றுவிடுவார்கள் என்றால், அதையும் இங்கிலாந்து நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களும் கணக்கில் எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் தருகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு அப்படி இந்த திருவள்ளுவர் பள்ளியில் படித்து, அந்த A grade மதிப்பெண்ணைப் பெற்ற ஒரு மாணவர், மிகச் சிறந்த பல்கலைக்கழகமான இம்பீரியல் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்திருப்பதை நண்பர்கள் மூலம் அறிந்தேன்! கலைஞரால் தமிழும், தமிழால் தமிழர்களும் பெருமை பெறுவதை, இந்த மேடையில் நான் நன்றியோடு நினைவு கூர்கிறேன்!

தலைவரின் ஆட்சிக் காலத்தில், அவர் கொண்டு வந்த திட்டங்களால் பயன் பெற்று, வாழ்வில் சிறந்த இடங்களை அடைந்திருக்கும் பல்லாயிரக் கணக்கான தமிழர்களை நாம் பார்க்க முடியும்!

இருபது நாள்களுக்கு முன்னால், மான்செஸ்டரில், மனித நேய நண்பர்கள் மன்றம் என்னும் அமைப்பு நடத்திய கருத்தரங்கம் ஒன்றில் உரையாற்ற நான் சென்றிருந்தேன். அங்கே என்னைச் சந்தித்த சரவணபவன் என்னும் நண்பர், கலைஞரின் சிறப்புகள் பற்றி என்னிடம் பேசிக் கொண்டே இருந்தார். கடல் தாண்டி வந்தும் கலைஞரை மறக்காமல் இருக்கிறீர்களே என்று சொல்லி மகிழ்ந்தேன். நான் கடல் தாண்டி வந்ததே கலைஞரால்தானே என்றார் அவர்!

### கலைஞர் கொண்டுவந்த திட்டம்!

அதற்கான விளக்கத்தையும் அவர் எனக்கு எடுத்துச் சொன்னார். தமிழ்நாட்டில் நான் பள்ளி இறுதி வகுப்பில் படித்து முடித்த போது, ஒரு குறிப்பிட்ட பாடத்தில் 114 மதிப்பெண்கள்தான் பெற்றிருந்தேன். அப்போது குறைந்தபட்சத் தகுதி மதிப்பெண் (Cut off mark) 120 என்று இருந்தது அந்த நேரத்தில்தான், முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், இந்தியாவிலேயே முதன் முறையாக, பிற்படுத்தப்பட்ட வகுப்புக்குள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு என ஒன்றை உருவாக்கி, அதற்கான அறிவிப்பை வெளியிட்டார். அதன் விளைவாக, 120 என்று இருந்த தகுதி மதிப்பெண் 112 க்கு வந்துவிட்டது! எனவே என்னால் உயர் கல்வியில் சேர்ந்து படிக்க முடிந்தது. அதில் படித்துப் பட்டம் பெற்றதால், வெளி நாட்டிற்கு வேலைக்கு வர முடிந்தது. இன்று நான் இந்தப் பெரிய பொறுப்பில் இருக்கிறேன் என்றால், அதற்கு அன்று தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த அந்தத் திட்டம்தான் காரணம் என்றார்!

இவ்வாறு தலைவரால் பயன்பெற்றவர்கள், வாழ்வில் உயர்நிலைகளை அடைந்தவர்கள் ஏராளம் பேர்! ஆனால் அதனை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்பதுதான் நம்முடைய வருத்தம்!

இவருக்கு முன்பாக, தன் நன்றி உணர்ச்சியை எழுத்திலேயே பதிவு செய்திருக்கிறார், மருத்துவர் திட்டக்குடி செந்தில்! சில ஆண்டுகளுக்கு முன்பு முரசொலியில், “கலைஞர் தாத்தாவுக்கு...” என்று அவர் ஒரு கடிதம் எழுதியிருந்தார்!

அவர் திட்டக்குடி என்னும் கிராமத்திற்கு அருகில், இளமங்கலம் என்னும் ஒரு சிற்றூரில் பிறந்தவர். ஐந்தாம் வகுப்பு வரை தினமும் 4 கிலோ மீட்டர் நடந்தே பள்ளிக்குச் சென்று வந்திருக்கிறார். ஆறாம் வகுப்புக்கு வந்த பிறகு, அரசுப் பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் பேருந்துப் பயணம் இலவசம் என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார். அன்று என் கால்கள் அடைந்த ஆனந்தத்தை எப்படிச் சொல்வது என்கிறார் செந்தில், அதன் பிறகு மருத்துவக் கல்லூரியில் சேர எண்ணிய போது, போதுமான மதிப்பெண்கள் அவரிடம் இல்லை. ஆனால் தலைவர் கலைஞர் அவர்களோ, கிராமப்புறத்து மாணவர்களுக்கு 15 விழுக்காடு இட ஒதுக்கீடு என்று அறிவித்த காரணத்தால், தான் அன்று படிக்கும் வாய்ப்பைப் பெற்று, இன்று சென்னையில் குழந்தைகள் நல மருத்துவராக இருக்கிறேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்!

தமிழ்ப் பிள்ளைகளுக்கு மட்டுமின்றி, தமிழ் ஈழப் பிள்ளைகளுக்கும் உதவியவர் தலைவர் கலைஞர். 1991 ஆம் ஆண்டு ஈழத்தில் இருந்து வந்திருக்கிற பிள்ளைகளுக்கு தனி இட ஒதுக்கீடு இல்லை என்று ஜெயலலிதா அறிவித்து விட்டார். அதன் பிறகு ஐந்து ஆண்டுகள் அந்தப் பிள்ளைகளால் மருத்துவமோ, பொறியியலோ, வேளாண்மையோ படிக்க இயலவில்லை. 1996 ஆம் ஆண்டு, ஆட்சிக்கு வந்த இரண்டே மாதங்களில், தமிழீழப் பிள்ளைகளுக்கு மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட அனைத்துக் கல்லூரிகளிலும் இட ஒதுக்கீட்டைக் கலைஞர் அறிவித்தார்! ஐந்து ஆண்டுகளில் எத்தனையோ ஈழத் தமிழ் பிள்ளைகள் கல்வி கற்று உயர்ந்தார்கள்!

தமிழினம் என்பதைத் தாண்டி, தலைவர் கலைஞரின் சமூக நீதிப் பார்வை இந்தியா முழுவதும் விரிந்து கிடந்தது! 1982 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவருக்கான தேர்தல் நடைபெற இருந்தது. அப்போது கலைஞர் முதலமைச்சராக இல்லை. என்றாலும் இந்திய ஒன்றிய அரசின் ஆளும் கட்சியாக இருந்த காங்கிரசோடும், பிரதமர் இந்திரா காந்தியோடும் நெருக்கமாக இருந்தார். ஆதலால் குடியரசுத் தலைவர் தேர்தல் குறித்து, இந்திரா காந்தி கலைஞரோடு கலந்துரையாடினார். துணைக் குடியரசுத் தலைவராக இருந்த ஆர். வெங்கட்ராமனைக் குடியரசுத் தலைவராக முன்மொழியலாம் என்பது அவர் கருத்து.

### சமூக நீதி மீதான கலைஞரின் பற்று!

கலைஞருக்கு அதில் உடன்பாடு இல்லை. அதனை மிக நயமாக பிரதமரிடம் அவர் எடுத்துரைத்தார். “நீங்கள் ஒரு வளர்ந்த சாதியில் பிறந்தவர். அதே சாதியைச் சார்ந்த இன்னொருவரைக் குடியரசுத் தலைவர் ஆக்கினால், அது சரியாக இருக்குமா என்று கேட்டார். அந்த கேள்வியில் உள்ள நியாயத்தை இந்திரா காந்தியும் புரிந்து கொண்டார். “சரி, வேறு யாரைத் தேர்ந்தெடுக்கலாம்?” என்று இந்திரா காந்தி கேட்டார்.

“உங்கள் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் கியானி ஜெயில் சிங்கை ஏன் அந்தப் பொறுப்பில் அமர்த்தக் கூடாது? அவர் சீக்கிய இனத்தைச் சேர்ந்தவர், அதோடு மட்டுமில்லாமல், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் பிறந்தவர்” என்றார் கலைஞர்! உடனே இந்திரா காந்தி, ஜெயில் சிங் குறித்து விசாரிக்குமாறு, தன் உதவியாளர் தவானிடம் சொன்னார். சற்று நேரத்தில் விடை கிடைத்தது. கலைஞர் சொல்வது சரிதான், அவர் பொற்கொல்லர் வகுப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் பிறந்தவர் என்று கூறினார்கள்.

இந்திரா காந்திக்கே வியப்பாக இருந்தது. இவர் எப்படி நம் கட்சியைச் சேர்ந்த, அதுவும் இந்தியாவின் வடக்குப் பகுதியில் வாழும் ஒரு தலைவர் குறித்து இவ்வளவு தெளிவாக அறிந்து வைத்திருக்கிறார் என்று நினைத்தார். சமூக நீதியின் மீது தலைவருக்கு இருந்த பற்றுதல்தான் இப்படிப் பல செய்திகளை அறிந்து வைத்துக் கொள்வதற்கும், தக்க நேரத்தில் உரிய பணிகளைச் செய்வதற்கும் காரணமாக இருந்திருக்கிறது!

அந்தச் செய்தி அறிந்து, ஆர். வெங்கட்ராமன் எவ்வளவு கோபம் கொண்டிருப்பார் என்பதை நம்மால் உணர முடிகிறது. அந்தக் கோபத்தைத்தான் அவர் 1991 ஜனவரியில் தீர்த்துக் கொண்டாரோ என்னவோ!

கலைஞர் தனிப்பட்ட பகை காரணமாகவோ, வேறு காரணங்களுக்காகவோ அப்படிச் செய்யவில்லை, சமூக நீதி உணர்வே அவரை அவ்வாறு செய்யத் தூண்டி இருக்கும் என்பதை, தலைவரை அறிந்தவர்கள் அறிவார்கள்!

இப்படி நாடு முழுவதும் மக்களுக்கான நல்லவைகளையே சிந்தித்துச் செயல்படுத்திய தலைவர் கலைஞர், வாழ்நாளெல்லாம் பல துன்பங்களையும், எதிர்ப்புகளையும் சந்தித்தே வாழ்ந்தார்! அவருடைய எழுத்திலிருந்தே சொல்ல வேண்டுமானால், எந்த ஒரு மகிழ்ச்சியும் 24 மணி நேரம் கூட தனக்கு நீடித்ததில்லை என்பார் கலைஞர். ஆனால் எந்தத் துயரம் கண்டும் அவர் துவண்டதில்லை. எந்த ஓர் இடியாலும், புயலாலும் அவரை அசைத்துக் கூட பார்க்க முடியவில்லை. துயரமான நேரங்களிலும் கூட, அதனை நகைச்சுவை உணர்வோடு எதிர்கொள்ளும் நெஞ்சுரம் அவருக்கு உண்டு!

முதுகில் ஓர் அறுவை சிகிச்சை முடிந்து, சென்னை, ராமச்சந்திரா மருத்துவமனையில் சிகிச்சை தொடர்ந்து கொண்டிருந்த நேரம். கடுமையான முதுகு வலி! அங்கிருந்த செவிலியர் ஒருவரை அழைத்து, தண்ணீர் வேண்டும் என்று கேட்கிறார் தலைவர். சில நாள்களுக்குக் கூடுதலாகத் தண்ணீர் கொடுக்கக் கூடாது என்று மருத்துவர்கள் அறிவுறுத்தி இருந்ததால், அந்தச் செவிலியர் சொட்டுச் சொட்டாக, மிகக்குறைவான தண்ணீரைக் கொடுக்கிறார். உடனே தலைவர் கலைஞர் அவரைப் பார்த்து, “என்னம்மா, தண்ணி கூட கொடுக்க மாட்டேன் என்கிறாய், உன் பேரு என்ன காவிரியா?” என்று கேட்டதும், அந்தப் பெண்ணுக்கே சிரிப்பு வந்துவிடுகிறது! உடல் ஓய்ந்திருந்த போதும், அவருடைய நகைச்சுவை உணர்வு ஓயவில்லை!

ஒருமுறை தலைவரைப் பற்றிய வீண் புரளி ஒன்று புறப்பட்டிருந்தது. தலைவரைக் களத்தில் வீழ்த்த முடியாதவர்கள், இப்படிப் பொய் புரளிகளால் வீழ்த்திவிடுவதற்கு அவ்வப்போது முயற்சி செய்வது உண்டு! அன்றைய நாளில் அறிவாலயத்தில் தலைவருடன் இருக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பாஜகவின் மூத்த தலைவர்களில் ஒருவரான இல. கணேசன் தொலைபேசியில் தலைவரிடம் அது குறித்துக் கேட்டார். பிறகு அவர், “இப்படி எல்லாம் செய்வது நல்லதில்லை. ஆனாலும், இது மாதிரிப் புரளிகள் உங்கள் ஆயுளை கூட்டிக் கொண்டே போகும்” என்று ஆறுதல் கூறினார். உடனே கலைஞர் பளிச்சென்று “அதுவும் நல்லதில்லை” என்றார்!

கலைஞரின் ஆற்றலை அறிஞர் அண்ணா அவர்களே பல முறை மெச்சிப் பாராட்டி இருக்கிறார். திருப்பூரில் ஒரு பொதுக்கூட்டம். இன்னொரு கூட்டத்தில் உரையாற்றி விட்டு வந்ததால், கலைஞர் சற்றுத் தாமதமாக வர, அண்ணா அவர்கள் முதலில் பேசி விடுகிறார். தன் பேச்சை முடிக்கும் போது, “கழகத்தின் முதல் பாகத்தை நான்பேசி முடித்திருக்கிறேன். இரண்டாம் பாகத்தை என் தம்பி கருணாநிதி எழுதுவார்” என்று கூறுகிறார்.

இதில் மிக நுட்பமாக ஒரு செய்தியை அண்ணா குறிப்பிட்டுள்ளார் என்று நாம் மேடைகளில் பேசுவது உண்டு! ஆனாலும் இது அன்றைய சூழலை யொட்டிச் சொல்லப்பட்டதுதான்!

ஆனால் இதே கருத்தைத் தன் கவிதை ஒன்றில் அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருப்பதை எங்கள் பேரவையின் தோழர் வேட சந்தூர் ரவி எனக்குக் கவனப் படுத்திய போது, உண்மையிலேயே மிக வியப்பாக இருந்தது! சென்னை, பூம்புகார் பிரசுரம், “அண்ணாவின் கவிதைகள்” என்று ஒரு நூலை வெளியிட்டுள்ளது. அந்த நூலில் ஆறாவது கவிதை மிகக் குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது!

“தம்பி கேள்!” என்னும் தலைப்பில் அண்ணா எழுதியுள்ள அந்தக் கவிதையின் முதல் நான்கு வரிகள் இவைதான்:

“காது கொடுத்துக் கேள் நீ தம்பி! என்றன் கருணாநிதி எனும் அரிய கழகத் தம்பி!

ஏதுமறியா தமிழர் தூய வாழ்வை எனக்குப் பின் சீர்படுத்தும் மறவன் நீதான்!”

இந்த வரிகள் அண்ணாவின் தொலைநோக்குப் பார்வைக்குச் சான்றாய் நிற்கின்றன! அறிஞருக்குப் பிறகு கழகத்தைக் கட்டி காத்து, 50 ஆண்டுகள் தலைமை பொறுப்பில் வீற்றிருந்து, மேலும் மெருகூட்டி, அதனை இன்று நம் தளபதியின் கைகளில் கொடுத்துவிட்டுப் போய் இருக்கிறார், முத்தமிழறிஞர், தலைவர் கலைஞர் அவர்கள்! அவரது நூற்றாண்டு விழாக்கள் நமக்கு உணர்வைத் தரும், ஊக்கம் தரும், கொள்கை ஊற்றம் தரும்! வாழ்க, வளர்க கலைஞரின் புகழ்!!

இவ்வாறு சுப. வீரபாண்டியன் பேசினார்.

## பல்லாவரம் - தாம்பரம் சட்டமன்றத் தொகுதிகளில்

# ரூ.37.59 கோடியில் மழைநீர் வடிகால் பணிகள்!

### டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைத்தனர்!

சென்னை, ஜூன்.16-

பல்லாவரம் - தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தாம்பரம் மாநகராட்சி பகுதிகளில் ரூ.37.59 கோடி மதிப்பீட்டில் 12.461கிலோ மீட்டர் நீளத்திற்கு புதிய மழைநீர் வடிகால் பணியை அமைச்சர் தா.மோ.அன்பரசன், டி.ஆர்.பாலு எம்.பி. ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ்ரூ.37.59 கோடி மதிப்பீட்டில் 12.461 கிலோ மீட்டர் நீளத்திற்கு புதிய மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்ப ட்டது. அதன்படி தாம்பரம் மாநகராட்சி, 1வது மண்டலத்தில், 2வது வார்டுக்கு உட்பட்ட குருசாமி நகர், பிரதான சாலை மற்றும் குருசாமி நகர் 7வது தெரு ஆகியவற்றில் ரூ.1.56 கோடி மதிப்பீட்டில் 0.525 கிலோ மீட்டர் நீளத்திற்கும், 8வது வார்டுக்கு உட்பட்ட மணிமேகலை தெரு, ஆனந்தன் தெரு மற்றும் மாதவி தெரு ஆகிய பகுதிகளில் ரூ.97 லட்சம் மதிப்பீட்டில் 0.395 கிலோ மீட்டர் நீளத்திற்கும் மழைநீர் கால்வாய்கள் அமைக்கப்பட உள்ளது.

மேலும் 2வது மண்டலத்தில் 17வது வார்டுக்கு உட்பட்ட பல்லவா சாலை, அமராவதி தெரு, சங்கரா சாலை, பாலாஜி சாலை, சங்கரன் சாலை விரிவு.பாலாஜி சாலை முதல் குறுக்குத் தெரு ஆகியவற்றில் ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் 1.330 கிலோ மீட்டர் நீளத்திற்கும், 20,21வது வார்டுக்கு உட்பட்ட எம்.கே. நகர்,ஏ.ஜி.எஸ். நகர், சாமி மலை நகர் மற்றும் நடேசன் சாலை ஆகியவற்றில் ரூ.2.85 கோடி மதிப்பீட்டில் 1.286 கிலோ மீட்டர் நீளத்திற்கும் மூடிபலகையிடல் ஆர்.சி.சி மழைநீர் கால்வாய் பணிகள் நடைபெற உள்ளது.

அதேபோல், 3வது மண்டலத்தில் 22வது வார்டுக்கு உட்பட்ட ஜெயின் நகர் மற்றும் 2வது தெரு, சீதாராமன் தெரு, ஜெயின் நகர், பிரதான சாலை, காவேரி தெரு,கங்கா தெரு, ஸ்ரீராம் நகர் முதல் பிரதான சாலை ஆகியவற்றில் ரூ.3.80 கோடி மதிப்பீட்டில் 1.550 கிலோ மீட்டர் நீளத்திற்கும் மூடிபலகையிடன் ஆர்.சி.சி மழைநீர் கால்வாய் பணிகள் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற உள்ளது.

42வது வார்டுக்குட்பட்ட மாருதி நகர், பிரதான சாலை, மாருதி நகர் முதல் பிரதான சாலை, வேணுகோபால்சாமி தெரு மற்றும் வள்ளல் யூசுப் சாலை ஆகியவற்றில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் 0.950 கிலோ மீட்டர்நீளத்திற்கும் கால்வாய் பணிகள் அமைக்கப்பட உள்ளது. மேலும் 41வது வார்டுக்குட்பட்ட ஸ்ரீதேவிஅவென்யூ முதல் டெலஸ் அவென்யூ5வது பிரதான சாலை வரை ரூ.3.60 கோடி மதிப்பீட்டில் 1.100 கிலோ மீட்டர் நீளத்திற்கும். வார்டு 39க்குட்பட்ட திருமலை நகர் முதல் பிரதான சாலையில் ரூ.3.40 கோடி மதிப்பீட்டில் 1.075 கிலோ மீட்டர் நீளத்திற்கும், 44வது வார்டுக்குட்பட்ட சுபாஷ் சந்திரபோஸ் தெரு, விநாயகர் தெரு, பாண்டியன் தெரு, பவானி தெரு ஆகிய பகுதிகளில் ரூ.3.29 கோடி மதிப்பீட்டில் 0.640 கிலோ மீட்டர் நீளத்திற்கும் கால்வாய் பணிகள் நடைபெற உள்ளது.

4வது மண்டலத்தில் 56வது வார்டுக்கு உட்பட்ட குறிஞ்சி நகர்,பிரதான சாலை, ராஜராஜேஸ்வரி நகர் ஆகியவற்றில் ரூ.2.13 போடி மதிப்பீட்டில் 0.710 கிலோ மீட்டர்நீளத்திற்கும், 5வது மண்டலத்தில் 65வது வார்டுக்குட்பட்ட ஐ.ஏ.எப் சாலையிலிருந்து சேலையூர் ஏரி கால்வாய் வரை ரூ.2.83 கோடி மதிப்பீட்டில் 0.480 கிலோ மீட்டர் நீளத்திற்கும், 67வது வார்டுக்குட்பட்ட பிருந்தாவன் நகர் பிரதான சாலையிலிருந்து வேங்கை வாசல் ஏரி வரை ரூ.7.02 கோடி மதிப்பீட்டில் 2.145 கிலோ மீட்டர் நீளத்திற்கும் உன மொத்தம் ரூ.37.59 கோடி மதிப்பீட்டில் 12.461 கிலோமீட்டர் நீளத்திற்கு தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் புதியமழைநீர் வடிகால் பணிகள் நடைபெறவிள்ளது.

இந்த பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றுது. இதில் தாம்பரம் மாநகராட்சி, 3வது மண்டலம் 22வது வார்டு ஜெயின் நகர் மற்றும் 5வது மண்டலம் 67வது வார்டுக்கு உட்பட்ட தேனுகாம்பாள் நகர், மாடம்பாக்கம் ஆகிய பகுதிகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் கழக பொருளாளர் தி.மு.க நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் குறுசிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தனர்.

நிகழ்ச்சிகளில் செங்கல்பட்டு கலெக்டர் ராகுல்நாத், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, துணைமேயர் கோ.காமராஜ், தாம்பரம் மாநகராட்சி ஆணையர் அழகுமீனா, மண்டல குழு தலைவர்கள் இ,ஜோசப் அண்ணாதுரை, எஸ்.இந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## அகில இந்தியக் குடிமைப் பணிதேர்வுப் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற

# 31 பேர் முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி

### முதன்மை தேர்வுக்கு விண்ணப்பம் கோரல்

சென்னை, ஜூன் 16-

தமிழ்நாடு அரசால் நிர்வகிக்கப்படும் அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையத்தில், மத்திய தேர்வாணையத்தால் நடத்தப்படும், அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான தேர்வுகளை எதிர்கொள்ளும் ஆர்வலர்களுக்கு முதல் நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, மாதிரி ஆளுமைத் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இனவாரியாகவும், கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த ஆர்வலர்கள் பயனடையும் வகையிலும் இப்பயிற்சி மையம் கடந்த 56 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது.

பசுமைச் சூழலில் அமைந்துள்ள இப்பயிற்சி மையத்தில் வகுப்பறைகள், தங்கும் இடவசதி, தரமான உணவு வழங்கும் விடுதி, கணினிமயமாக்கப்பட்ட நூலகம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் அமைந்துள்ளன. சிறந்த பயிற்றுநர்களைக் கொண்டு பயிற்சி அளிப்பதுடன், ஆர்வலர்கள் தங்களை தேர்வுக்குத் தயார்ப்படுத்திக்கொள்ளும் வகையில் மாதிரித்தேர்வுகளும் நடத்தப்படுகின்றன.

கடந்த 28.05.2023அன்று நடைபெற்ற குடிமைப்பணி முதல்நிலைத் தேர்வில் இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று தேர்வு எழுதிய தேர்வர்களில் 31 ஆர்வலர்கள் தேர்ச்சிப் பெற்றுள்ளார்கள். இவர்களில் ஏழு பெண் ஆர்வலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு 05.12.2022 முதல் 28.05.2023 வரை உண்டி உறைவிடத்துடன் கூடிய அறைகள் வழங்கப்பட்டு கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. தேர்வர்களுக்கு நடப்பாண்டில் 21 நேரடி தொடர்த் தேர்வுகள் மட்டுமல்லாது, இணையவழியில் 01.04.2023 முதல் 19.05.2023 வரை 40 தொடர்த்தேர்வுகள் (Online Test Series) நடத்தப்பட்டன.

குடிமைப்பணி முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள ஆர்வலர்களுக்கு ஜூன் 2023 முதல் செப்டம்பர் 2023 வரை மூன்று மாதங்களுக்கு முதன்மைத் தேர்வு பயிற்சி வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற ஆர்வலர்கள் மட்டுமன்றி, குடிமைப்பணி முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழ் நாட்டைச் சார்ந்த ஆர்வலர்களும் இப்பயிற்சி மையத்தில் சேர்ந்து பயிற்சி பெறலாம். பயிற்சி பெறக் கூடிய மூன்று மாத காலத்திற்கும் மாதந்தோறும் ஊக்கத் தொகையாக ரூ.3000/ (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) வழங்கப்படும்.

அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் சேர விரும்பும் ஆர்வலர்கள் 15.06.2023 (வியாழக் கிழமை) காலை 10.00 மணி முதல் 17.06.2023 (சனிக் கிழமை) மாலை 06.00 மணி வரையில் www.civilservicecoaching.com என்ற இணையத்தில் தங்கள் விவரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இட ஒதுக்கீட்டின்படி தெரிவு செய்யப்பட்ட ஆர்வலர்கள் விவரம் 18.06.2023 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 06.00 மணியளவில் இணையத்தில் வெளியிடப்பட்டு, 19.06.2023 மற்றும் 20.06.2023 ஆகிய இரு நாட்களில் சேர்க்கை நடைபெறுவதோடு 21.06.2023 முதல் வகுப்புகள் தொடங்கப்படும். இணையத்தில் பதிவு மேற்கொள்ளும் ஆர்வலர்கள், விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளபடி, வருமானச் சான்றிதழ் விண்ணப்பித்தமைக்கான இணைய ரசீதை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். வருமானம் தொடர்பாக உரிய அலுவலர்கள் அளித்த வருமானச் சான்றிதழ், பிறப்பிடச் சான்றிதழினையும் (Nativity Certificate) சேர்க்கையின் போது ஒப்படைக்க வேண்டும்.

அரசு விதிகளுக்குட்பட்டுப் பதிவு செய்தவர்களில். 225 ஆர்வலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தங்கும் வசதிகளுடன் குடிமைப்பணி முதன்மைத் தேர்வுக்குப் பயிற்சியளிக்கப்பட உள்ளார்கள்.

## அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில்

# கைத்தறித் துணி நூல் துறைகளின் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, ஜூன் 16-

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் நேற்று முன்தினம் 14.06.2023 2023-2024ஆம் ஆண்டின் கைத்தறி மற்றும் துணிநூல் துறைகளின் அறிவிப்புகள் செயலாக்கம் குறித்து துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் எழும்பூர் கோஆப்டெக்ஸ் அலுவலகத்தில் நடைபெற்றது.

2021-2022, 2022-2023 மற்றும் 2023-2024 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட சட்டமன்றப் பேரவை அறிவிப்புகளில், செயலாக்கத்தில் உள்ள திட்டங்களை விரைந்து முடிக்கவும், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்தும் கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்களால் உரிய அறிவுரைகள் துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும், ஆரணியில் அமையவுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு நினைவு பட்டு கைத்தறி பூங்கா குறித்து, பூங்கா அமைப்பாளர்கள் மற்றும் Consultant ஆகியோருடன் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு, விரைந்து முடித்திட அறிவுரை வழங்கப்பட்டது.

துணிநூல் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்ததுடன், கூட்டுறவு நூற்பாலைகள் நடப்பாண்டில் இலாபத்தில் செயல்படுவது குறித்து பாராட்டு தெரிவித்தார்,

மேலும், கோஆப்டெக்ஸ் நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளில் இலாபத்தில் செயல்படுவதை பாராட்டியதுடன், நடப்பாண்டில் கோஆப்டெக்ஸ்விற்பனையினைஇரண்டு மடங்காக உயர்த்த வேண்டியதற்கு தகுந்த திட்டங்கள் வகுத்து செயல்படுத்தவும் அமைச்சர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ் , துணிநூல் துறை ஆணையர் மா.வள்ளலார், கைத்தறி துறை ஆணையர் கே.விவேகானந்தன், மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் ஒன்றியம் எழுமகளூர் ஊராட்சி கிளியனூர் மோர்குள தெருவில் ஏற்பட்ட தீ விபத்தில் கோபால், பிச்சமுத்து, பாலமுருகன் ஆகியோரின் வீடுகள் எரிந்து சேதமடைந்தன. இதையடுத்து மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் நேரில் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறி கழகத்தின் சார்பில் பொருட்கள் மற்றும் நிதி உதவிகளை வழங்கினார். உடன் குத்தாலம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.ராஜா, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வி.சௌமியன் மற்றும் பலர் உள்ளனர்.